# ஜனவரி – 09 – செவ்வாய்

### தூய யூலியன்

### நான் உமக்கு நன்றிப் பலி செலுத்துவேன்: ஆண்டவராகிய உம் பெயரைத் தொழுவேன்:திபா. 116:17

---

## முதல் வாசகம் : 1 சாமுவேல் 1 : 1 – 8

எப்ராயிம் மலைநாட்டைச் சார்ந்த இராமாத்தயிரம் சோப்பிமில் எல்கானா என்ற ஒருவர் இருந்தார். இவர் எப்ராயிமைச் சார்ந்த சூப்பின் மகனான தோகூவின் மைந்தனான எலிகூபின் புதல்வனான எரொகாமின் மகன். அவருக்கு அன்னா, பெனின்னா என்ற இரு மனைவியர் இருந்தனர் பெனின்னாவுக்குக் குழந்தைகள் இருந்தனர். அன்னாவுக்கோ குழந்தைகள் இல்லை எல்கானா ஆண்டுதோறும் சீலோவில் படைகளின் ஆண்டவரை வழிபடவும் அவருக்குக் பலி செலுத்தவும் தம் நகரிலிருந்து சென்று வருவார். அங்கே ஆண்டவரின் குருவான ஏலியின் இரு புதல்வர்கள் ஒப்னியும் பினகாசும் இருந்தனர். எல்கானா, தாம் பலி செலுத்திய நாளில், தம் மனைவி பெனின்னாவுக்கும் அவளுடைய புதல்வர் புதல்வியர் அனைவருக்கும் பங்கு கொடுப்பதுண்டு. அன்னாவின் மீது அன்புகொண்டிருந்தும் அவருக்கு ஒரே பங்கைத்தான் அளித்தார். ஏனெனில் ஆண்டவர் அவரை மலடியாக்கியிருந்தார். ஆண்டவர் அவரை மலடியாக்கியிருந்ததால் அவருடைய சக்களத்தி அவரைத் துன்புறுத்தி வதைத்தாள். இவ்வாறு ஆண்டுதோறும் நடந்தது அவர் ஆண்டவரின் இல்லம் வந்த போதெல்லாம் அவள் அவரைத் துன்புறுத்துவாள். அன்னா உண்ணாமல் அழுவார். அப்போது அவர் கணவர் எல்கானா அவரை நோக்கி அன்னா நீ ஏன் அழுகிறாய்? நீ ஏன் உண்ணவில்லை? நீ ஏன் மனவருத்தம் அடைகிறாய்? நான் உனக்குப் பத்துப் புதல்வரை விட மேலானவன் அன்றோ? என்பார்.

**பதில்பாடல்:** ஆண்டவரை முன்னிட்டு என் இதயம் மகிழ்கின்றது.

## நற்செய்தி : மாற்கு 1 : 14 - 20

அக்காலத்தில் யோவான் கைதுசெய்யப்பட்டபின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று அவர் கூறினார். அவர் கலிலேயக் கடலோரமாய்ச் சென்றபோது சீமோனையும் அவர் சகோதரரான அந்திரேயாவையும் கண்டார். மீனவர்களான அவர்கள் கடலில் வலை வீசிக்கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, "என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். பின்னர், சற்று அப்பால் சென்றபோது செபதேயுவின் மகன் யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் இயேசு கண்டார். அவர்கள் படகில் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடனே இயேசு அவர்களையும் அழைத்தார். அவர்களும் தங்கள் தந்தை செபதேயுவைக் கூலியாள்களோடு படகில் விட்டுவிட்டு அவர் பின் சென்றார்கள்.

**தியானம்:** நம்பிக்கை என்பது மனித வாழ்விற்கு இன்றியமையாத தொன்றாகும். இந்நம்பிக்கையானது உறுதியானதாக இருந்தால் கஷ்டங்கள், துன்பங்கள், வேதனைகள் எதுவாக இருந்தாலும் நாங்கள் இறைவனிடம் யாவற்றையும் ஒப்புக்கொடுத்து, இயேசுவே என்மீது இரங்கும் நம்பிக்கையுடன் வேண்டுவோமாயின் நிற்சயமா இறைவன் பதில் கொடுப்பார். அன்று அன்னா குழந்தை இல்லையே என்று மனம் நொந்து அழுது இறைவனிடம் வேண்டினாள். (மாற்.1:11) இதைப்பார்த்து ஏலி குடிகாரி என்ற பட்டத்தையும் சூட்டிவடுகிறாா். ஆனால் இறைவனோ அன்னாவின் அழுகுரலை கேட்டார். எங்கள் மத்தியிலும் சிலா் அனுதினமும் இறைவனிடம் மன்றாடும் பொழுது அதைப்பார்த்து எள்ளி நகையாடுபவா்களும் உண்டு. ஆனால் அவா்கள் இறைவனின் சித்தத்தின் நிமித்தம் தரவேண்டிய நேரத்தில் தருவார் என்று இறைவன் மேல் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையுடன் மன்றாடுகின்றார்கள். எள்ளி நகையாடுபவா்களோ இருக்கும் மட்டும் நாங்கள் யாவற்றையும் அனுபவிக்கவேண்டும் என்று ஏனோ தானோ என்று வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். நாங்கள் எமக்கு தேவையானதற்கு மட்டும் இறைவனிடம் மன்றாடாமல், எவ்வேளையிலும் நாங்கள் நன்றி கூற வெண்டும். அன்று அன்னாவின் அழுகுரலைக் கேட்டு தனது வல்லமையை வெளிப்படுத்திய இறைவன். நற்செய்தி வாசகத்திலும் கூட இயேசு தீய ஆவி பிடித்தவரை “வாயை மூடு இவரை விட்டு வெளியே போ” என்று அதிகாரத்துடன் வெளியேற்றி தான் இறைவனுக்கு அா்ப்பணமானவா் என்பதை வெளிப்படுத்துகின்றாா். தீய ஆவிக்கே இயேசு கடவுளுக்கு அா்ப்பணமானவா் என்பது தெரிகிறது. ஆனால் நாங்களோ தெரிந்தும் தெரியாதவா்கள் போன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எனவே நம்பிக்கையற்ற வாழ்க்கை வாழாமல், நம்பிக்கையே எமது வாழ்வில் மையமாகக் கொண்டு அா்ப்பண ஜோதியாம் இயேசுவிடம் எங்கள் ஒவ்வொருவரையும் அா்ப்பணமாக்குவோம்..